**த. நா.ச.பே. எண் : 044** **நாள் : 06.12.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(6.12.2018)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தில், மேகதாது பிரச்சனை தொடர்பாக முன்மொழிந்த தனித் தீர்மானம்:—

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

காவேரி உரிமையை மீட்டெடுக்க கால் நூற்றாண்டுக்கும் மேலாக தொடர் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டு விவசாயம் செழிக்க செய்திட்ட தெய்வத் திருமகள் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நீண்ட நெடிய சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் தமிழ்நாட்டிற்கு உரிய காவேரி நீர் கிடைக்கும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்த இந்த நேரத்தில், மத்திய நீர்வளக் குழுமம், கர்நாடகத்திலுள்ள மேகதாதுவில் அணை கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க, கர்நாடக அரசுக்கு **22.11.2018** அன்று அனுமதி வழங்கிய செயல், நம் அனைவரையும் மிகவும் கொதிப்படைய வைத்திருக்கிறது. இதை தமிழ்நாட்டில் உள்ள அனைவரும் கடுமையாக எதிர்த்து வருகின்றோம். இந்த நிலையில் தமிழ்நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், நாம் அனைவரும் ஒருமித்த கருத்தோடு, நம் உணர்வையும், எதிர்ப்பையும், கண்டனத்தையும், தமிழ்நாட்டின் நிலைப்பாட்டையும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் விதமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டு வந்துள்ள இந்த தீர்மானத்தை, அவையில் நான் முன்மொழிய விழைகிறேன். இத்தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்து அதனை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

# தீர்மானம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இம்மாமன்றத்தில் 5.12.2014, 27.3.2015 ஆகிய நாட்களில் கர்நாடக அரசு மேகதாதுவில் புதிய அணை கட்டக்கூடாது என ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கருத்தில் கொள்ளாமலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்படுகை மாநிலங்களின் முன்அனுமதி பெறாமல், கர்நாடக அரசு எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தக் கூடாது என்பதையும் மீறி, தற்பொழுது கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை துவக்க உள்ளதற்கும், மேகதாதுவில் புதியதாக அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு மத்திய நீர்வளக் குழுமம் 22.11.2018 அன்று அனுமதி வழங்கியதற்கும் இம்மாமன்றம் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

மத்திய நீர்வளக் குழுமம் வழங்கிய அனுமதியை திரும்பப்பெற அக்குழுமத்திற்கு மத்திய நீர்வள ஆதார அமைச்சகம் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்றும் இம்மாமன்றம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றை மீறும் வகையில், கர்நாடக அரசோ அல்லது அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களோ, கர்நாடகாவில் உள்ள காவேரி படுகையில், மேகதாது அல்லது வேறு எந்தவொரு இடத்திலும் தமிழ்நாட்டின் இசைவின்றி எவ்வித கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று கர்நாடகா அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என இம்மாமன்றம் கேட்டுக் கொள்கிறது.

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9